நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

## புதிய பணவீக்கக் கொள்கை

ஆர்.எஸ். நாராயணன்

First Published : 14 May 2012 03:51:48 AM IST

இந்தியாவின் கார்ப்பரேட் செக்டாரையும், நிதியமைச்சரையும் 17-4-2012 அன்று மகிழ்ச்சியில் ஆழ்த்திய விஷயம், ரிசர்வ் வங்கி கவர்னர் டி. சுப்பாராவ் ரெப்போ வட்டியை அரை சதவிகிதம் குறைத்ததுவே.

சென்ற ஆண்டு சுப்பாராவ், ""எக்காரணம் கொண்டும் பணவீக்கத்தை அனுமதிக்க முடியாது'' என்று பேசியவர், இன்று வளர்ச்சியைக் கவனத்தில் கொள்வதாகப் பேசுவதைக் கவனித்தால் நிதியமைச்சர் தரும் நெருக்குதலைப் புரிந்துகொள்ளலாம்.

நிதிக் கொள்கையை நிதியமைச்சர் வகுத்தாலும் அவர் மனம்போன போக்கில் செலவுகளை அனுமதித்து நோட்டை அச்சடித்து வழங்கும்படி ரிசர்வ் வங்கியை நிர்பந்திக்க முடியாது.

புழக்கத்தில் எந்த அளவுக்குப் பணம்விட வேண்டும் என்பதில் பல சட்டதிட்டங்கள் உள்ளன. பணப்புழக்கம் உயர்ந்தால் வளர்ச்சி ஏற்படுகிறதோ இல்லையோ பணவீக்கம் அதிகமாகும்.

பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தவே ரெப்போ வட்டி கூட்டப்படுகிறது. உணவு மொத்தவிலைக் குறியீட்டெண் சற்றுக் குறைந்ததைக் காரணம் காட்டி ரெப்போ வட்டியை ரிசர்வ் வங்கி 8.5 சதவிகிதத்திலிருந்து 8-ஆகக் குறைத்துள்ள பின்னணியில் நிதியமைச்சகத்தின் நெருக்கடி புலனாவதாக ஊடகங்கள் கூறுகின்றன.

மொத்தவிலைக் குறியீட்டெண் 7 சதவிகிதமாகக் குறைந்தாலும் நுகர்வோரைப் பாதிக்கும் சில்லறை விலைக் குறியீட்டெண் 9 சதவிகிதத்தில் உள்ளது. நெல்விலை குறைந்தாலும் அங்காடியில் அரிசி விலை குறையவில்லை.

வளர்ச்சி 6.1 சதவிகிதமாகப் பின்னுக்குத் தள்ளப்பட்டதால் வட்டி விகிதம் தளர்த்தப்பட்டது என்று கூறப்படுவதற்கு எதுவும் பொருள் உள்ளதா என்று யோசிப்பது நல்லது. வளர்ச்சிக்கும் வட்டிக்கும் உள்ள தேவை - வழங்கல் நிலை தெளிவாக இல்லை.

வளர்ச்சி ஏன் குறைகிறது? தேவை - வழங்கல் கொள்கையில் பொருத்தம் குலையும்போது வளர்ச்சி குன்றுகிறது.

தேவைப்பக்கம் உள்ள செலவினங்களில் நுகர்வுச் செலவு, முதலீட்டுச் செலவு, அரசுச் செலவு ஆகியவை உள்ளன.

வழங்கல் பக்கம் உள்ள வரவுகளில் தொழில் - வேளாண்மை உற்பத்தி அல்லது ஜி.டி.பி என்ற ஒட்டுமொத்த உற்பத்திகளின் வருமான மதிப்பு.

தேவை - வழங்கல் ஆற்றலைச் சீர்குலைய வைக்கும் சக்திகளில் ஏற்றுமதி - இறக்குமதிச் சமன்நிலை, அனைத்துலக எண்ணெய் விலை, அனைத்துலக உணவு விலை என்று பல உள்ளன.

இன்று ரூபாயின் நாணய மதிப்பு பலவீனமாயுள்ளது. இந்தப் பலவீனத்துக்குக் காரணமே பணவீக்கம். வட்டிக்குறைப்பால் இந்தப் பலவீனம் மோசமாகும்.

இந்தப் பலவீனத்தால் இறக்குமதி மதிப்பு உயர்ந்து ஏற்றுமதி மதிப்பு குறைந்தவண்ணம் உள்ளது. இந்த வர்த்தகப் பற்றாக்குறையைச் சரிப்படுத்தாமல் வட்டியைக் குறைப்பதால் ஒரு நன்மையும் இல்லை. தவிரவும் மத் திய அரசு ஏப்ரல் - செப்டம்பர் 2012 - காலகட்டத்தில் 3,70,000 கோடி ரூபாய் பொதுக்கடன் பெறத் திட்டமிட்டுள்ளது.

இந்தப் பணம் புழக்கத்தில் வரும்போதும் தேவை - வழங்கல் சமன்பாட்டைச் சீர்குலைத்துப் பணவீக்கத்தையே ஏற்படுத்தும்.

தேவைகளின் பக்கத்தையும் வழங்கலின் பக்கத்தையும் கூட்டிக் கழித்துப் பார்த்தால், வளர்ச்சியும் பணவீக்கமும் தேனிலவு நிகழ்த்தி வருவதை எந்தச் சக்தியாலும் தடுக்க முடியாது என்றே தோன்றுகிறது.

எனவே பணவீக்கக் கரு என்ற புதிய அகராதியைக் கற்பித்துள்ளனர். இந்தப் பணவீக்கக் கரு என்பது சிரஞ்சீவி. எந்தக் காலகட்டத்திலும் இருக்கும்.

குறிப்பாக உணவு, எரிசக்தி எண்ணெய் விலை ஏற்றத்தைப் பற்றிப் பொருள்படுத்தாமல் வளர்ச்சிச் சக்கரத்தை உருட்டுவதற்குப் பணவீக்கக் கருவின் ஆட்சியை நீடிக்கச் செய்வதுதான் புதிய பணவீக்கக் கொள்கை.

வளர்ச்சியுற்ற மேலைநாடுகளில் பணவீக்கக் கருவின் நீட்சி போற்றப்படுகிறது. அங்குள்ள மக்களின் வரவு - செலவுக் கணக்கில் உணவு - எரிபொருள் எண்ணெய் வகிக்கும் பங்கு குறைவு. எல்லாவற்றிலும் அமெரிக்காவைப் பின்பற்றும் நாம் பணவீக்கக் கொள்கையை மட்டும் விட்டு வைப்பானேன்?

இந்தியாவில் இப்படிப்பட்ட பணவீக்கக் கருவை நிலைப்படுத்த முயலும்போது நிறைய சிக்கல் ஏற்படும். நுகர்வோர் செலவுகளில் இந்தியாவில் உணவும் எரிபொருளும் வகிக்கும் பங்கு வளர்ச்சியுள்ள நாடுகளைப்போல் குறைவானது அல்ல.

ஆகவே, எந்த நிலையிலும் பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தினால்தான் விலைவாசி குறையும்.

குளத்து வேலைத் திட்டம், இலவச அரிசித் திட்டம் போன்ற உற்பத்தித்தன்மையில்லாத செலவினங்களினால் ஓரளவுக்குத்தான் ஏழைகள் "பணவீக்கக் கரு' நிவாரணம் பெறலாம் என்றாலும் தொழில் பொருள் உற்பத்தி மூலம் வருமானம் பெருகினால்தான் பணவீக்கம் கட்டுக்குள் வரும்.

ரெப்போ வட்டி அரை சதவிகிதம் குறைந்துவிட்டதால் தொழில் முதலீடு பெருகுமா - வர்த்தக முதலீடு பெருகுமா என்று யோசித்தால், இதனால் நிவாரணம் பெறக்கூடியவர்கள் வீட்டு வசதி - கட்டுமானத் தொழில் முனைவோர்கள் மட்டுமே.

இது ஒட்டுமொத்த ஜி.டி.பி கணக்கில் வராது. இந்த ஆண்டு முழுவதும் 6.5 சதவிகிதம் பணவீக்கக் கரு நிலை பெறுவதுடன் இதர பொருள்களின் விலை ஏற்றத்தால் இந்த 6.5 சதவிகிதம் பணவீக்கம் 8 அல்லது 9 சதவிகிதம் வரை உயர்ந்தாலும் வியப்பில்லை.

கடந்தகாலம்வரை ரிசர்வ் வங்கி புழக்கத்தில் விடும் பணத்தின் அளவு ஒட்டுமொத்த ஜி.டி.பி வளர்ச்சி விகிதத்தை தேவையால் உயரக்கூடிய வருமானத்தால் பெருக்கி, கூடவே 4.5 சதவிகிதப் பணவீக்கத்தை அனுமதித்து கரன்சி நோட்டுகளை அச்சடிப்பது மரபு.

இப்போது புதியதோர் பணவீக்கத்தை அனுமதித்து, அதாவது 6.5 சதவிகித பணவீக்கம் நிலைத்திருக்கும் அளவில் கரன்சி நோட்டுக்களை அச்சடித்து விநியோகமாகப் போகிறது.

சமீபத்தில் குறைக்கப்பட்ட ரெப்போ வட்டிவிகிதம் கிராமத்திலோ நகரத்திலோ வாழ்ந்து வரும் நடுத்தர வர்க்கத்துக்கு நன்மை தருமா?

குறைந்த வட்டி விகிதம் என்பது விவசாயத்துக்கோ ஏற்றுமதிக்கோ பொருந்தாது. மேற்படி இரண்டு துறைகளும் எப்போதும் குறைந்த வட்டிகொண்டு பலன் பெறுகின்றன.

விவசாயக்கடன் வட்டிக் குறைப்பு விவசாயிகளுக்கு அல்ல. விவசாய இடுபொருளாகிய உரம், பூச்சிமருந்து, இயந்திர விற்பனையாளர்களுக்கு உதவும்.

முன்பெல்லாம் கிராமங்களில் விலைவாசி குறைவாகவும் நகரங்களில் விலைவாசி கூடுதலாகவும் இருக்கும். இப்போது எல்லா ஊர்களிலும் விலைவாசி கூடிக்கொண்டேதான் செல்கிறது.

தொழில்துறையைப் பொருத்தவரை, ஒரு பொருளின் ஆக்க மதிப்பில் வட்டி விகிதம் பெறும் பங்கு அற்பமே.

இதைத் தொழில் நிறுவனங்களின் நிதி அறிக்கை - ஆடிட்டர் அறிக்கைகளின் மூலம் நிரூபிக்கலாம். ஆகவே, இந்த வட்டிக் குறைப்பால் தொழில் உற்பத்திப் பொருள் விலை குறைய வாய்ப்பே இல்லை.

கார்ப்பரேட் செக்டாருக்கு அரை சதவிகித வட்டிக் குறைப்பு என்பது அவர்களின் பையில் போடும் லாபமே. மக்கள்தான் விலை ஏற்றத்தைப் பொறுத்துக்கொண்டு புதிய பணவீக்கக் கொள்கையை வரவேற்றுத் தோள் கொடுக்க வேண்டும்.

## பருத்தி குவிண்டால் ரூ. 3,825-க்கு விற்பனை

First Published : 13 May 2012 02:33:27 PM IST

பெரம்பலூர், மே 12: பெரம்பலூர் மாவட்ட ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் குவிண்டால் பருத்தி அதிகபட்சமாக ரூ. 3,825-க்கு வெள்ளிக்கிழமை விற்பனையானது என்றார் மாவட்ட ஆட்சியர் தரேஸ் அஹமது.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு:
பெரம்பலூர் மாவட்ட ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தின் மூலம் ஒவ்வொரு வாரமும் வெள்ளிக்கிழமை பருத்தி மற்றும் மக்காசோளம் ஆகிய விளை பொருள்கள் வரப் பெற்று விவசாயிகளுக்கு விற்றுத்தரப்படுகிறது.
அதன்படி, வெள்ளிக்கிழமை 210 மூட்டை பருத்தி ரூ. 2 லட்சத்து 45 ஆயிரத்துக்கு விற்றுத்தரப்பட்டது. இதில் குவிண்டால் பருத்தி அதிகப்பட்சமாக ரூ. 3,825-க்கு விற்பனையானது.
எனவே, வாரந்தோறும் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் வெள்ளிக்கிழமை நடைபெறும் விற்பனையில் பருத்தி, மக்காசோளம் ஆகிய விளை பொருள்களை விற்று விவசாயிகள் பயன்பெறலாம் என்றார் அவர்.

---

தினமலர்
உண்மையின் உரைகல்

**விவசாயிகளுக்கு மரக்கன்றுகள் இலவசம்**

பதிவு செய்த நாள் : மே 14,2012,01:35 IST

செங்கல்பட்டு: காட்டின் பரப்பை பெருக்கும் வகையில் விவசாயிகளுக்கு இலவச மரக்கன்றுகளை வினியோகம் செய்ய, வனத்துறை முடிவு செய்துள்ளது. பல்லுயிர் பெருக்க பாதுகாப்பு மற்றும் பசுமைத் திட்டத்தின் கீழ், செங்கல்பட்டு மற்றும் சுற்றியுள்ள கிராமங்களில் இந்த திட்டம் அமல்படுத்தப்படுகிறது.தமிழகத்தில் காட்டின் பரப்பளவு, குறைந்து வருகிறது. தற்போது 21.79 சதவீத பரப்பளவு காடுகள் மட்டுமே உள்ளன. காடுகளின் பரப்பை அதிகரிக்க ஜப்பான் நிதியுதவியுடன், தமிழ்நாடு பல்லுயிர் பெருக்க பாதுகாப்பு மற்றும் பசுமைத் திட்டத்தின் கீழ், தனியார் நிலங்களில் பல்வகை மரங்களை நட்டு வளர்க்க, தமிழக வனத்துறை திட்டமிட்டுள்ளது.ஜப்பான் நாட்டைச் சேர்ந்த, பன்னாட்டு நிதி நிறுவனம், 2011-12ம் ஆண்டிலிருந்து 2018-19ம் ஆண்டு வரை, எட்டு ஆண்டுகளுக்கு திட்டத்தை செயல்படுத்த, தமிழக அரசுக்கு 686 கோடி ரூபாய் நிதியுதவி வழங்கியுள்ளது.தனியார் நிலத்தில் மரங்கள் வளர்ப்பதற்கு பல்வேறு முக்கிய காரணங்கள் கூறப்படுகின்றன. அவை,* உலகில் 33 சதவீதம் அளவில் மரப்பரப்பை உருவாக்க உதவுதல்* உள்ளூர் தேவைக்கான தடிமரத்தை வளர்த்துக் கொள்வதால், காடுகளை அழிப்பதற்கான நிர்பந்தத்தை குறைத்தல்.* விவசாயிகளுக்கு நிலையான மற்றும்

லாபத்தை உருவாக்குதல்.* மரம் வளர்ப்பு தொழில்நுட்பத் திறன்களை வலுப்படுத்துதல்.இந்த அடிப்படையில் தான் இந்த திட்டம் கிராமப்புற விவசாயிகளிடம் அறிமுகப்படுத்தப்படுகிறது.திட்டத்தின் கீழ் பயன் பெறுவோருக்கான தகுதியும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஐந்து எக்டேருக்கு குறைவாக நிலம் வைத்திருப்போர், மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்கள், நிலங்களோ அல்லது வீடுகளின் அருகில் மரம் வளர்க்க முன்வருவோர் இதில் சேர்ந்து பயன் பெறலாம். மரம் வளர்ப்பில் மிகுந்த ஈடுபாடு உள்ளவர்களும் இந்த திட்டத்தில் சேரலாம்.

**மரக்கன்றுகள் வினியோகம்**ஐந்து ஏக்கருக்கு மேல் நிலம் உள்ள விவசாயிகளுக்கு எக்டேருக்கு 490 தேக்கு மரச்செடிகள், 210 சவுக்கு மரக்கன்றுகள் இலவசமாக வழங்கப்படும். சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு, எக்டேருக்கு 245 தேக்கு மரச்செடிகள், 105 சவுக்கு மரக்கன்றுகள் வழங்கப்படும். விவசாயிகள் விருப்பத்திற்கேற்ப மலை வேம்பு, குமிழ், சிவப்பு செம்மரம், பெருமரம் போன்ற மரங்களை வளர்க்கவும் ஊக்குவிக்கப்படும்.

**கிராமங்கள் தேர்வு**செங்கல்பட்டு வனக்கோட்டத்தில், வன விரிவாக்க மையம் மூலம், 18 கிராமங்களில் மைய அதிகாரிகள் ஆய்வு மேற்கொண்டு சிறு, குறு மற்றும் பெரிய விவசாயிகளை தேர்வு செய்து, அவர்களின் விருப்பத்திற்கேற்ப நிலங்களை கணக்கிட்டு, பல்வகை மரக்கன்றுகள் வழங்க உள்ளனர். நீண்ட கால மரச்செடிகள் 70 சதவீதமும், குறுகிய கால மரச்செடிகள் 30 சதவீதமும் வழங்கப்படுகிறது.

**மண் தரம்**செங்கல்பட்டு வனவியல் வரிவாக்க மைய அலுவலர் ராஜேந்திரன் கூறியதாவது:திட்டத்தில் இந்த வருடம், 18 கிராமங்களை தேர்வு செய்துள்ளோம். பின்னர் அனைத்து கிராமங்களிலும் செயல்படுத்தப்படும். விவசாயிகளுக்கு ஒரு முறை மட்டுமே, இத்திட்டத்தின் கீழ் உதவி வழங்கப்படும். மரங்களை பராமரிப்பது குறித்த விளக்கமும், பயிர்களுக்கு தேவையான உயிர் உரங்களும் வழங்கப்படும். மரச்செடிகளை வளர்த்து, மூன்று வருடம் நல்ல பராமரிப்பில் வைத்திருப்பவர்களுக்கு, ஊக்கத்தொகை வழங்கப்படும். மரங்கள் வளர்ப்பதன் மூலம், மண் தரம் உயரும். ஆக்சிஜன் வாயு முழுமையாக கிடைக்கும். இவ்வாறு ராஜேந்திரன் கூறினார்.

## மூடி கிடக்கும் வேளாண்மை அலுவலகம் விதை பெற முடியாமல் விவசாயிகள் தவிப்பு

பதிவு செய்த நாள் : மே 14,2012,02:00 IST

திருத்தணி: வேளாண்மை விரிவாக்க அலுவலகம் ஒரு மாதமாக மூடிக் கிடப்பதால், விவசாயிகள் தங்களுக்கு தேவையான விதைகளை வாங்க முடியாமல் அவதிப்படுகின்றனர்.
ஆர்.கே.பேட்டை ஒன்றியம், சின்ன நாகபூடியில் வேளாண்மை விரிவாக்க ஒழுங்குமுறை

விற்பனை நிலையம் இயங்கி வருகிறது. இங்கு, விவசாயிகளுக்கு ÷தவையான நெல், கம்பு, கேழ்வரகு, வேர்க்கடலை, உளுந்து, துவரை போன்ற பயிரிடுவதற்கு தேவையான விதைகள், அரசு மானியத்துடன் வழங்கப்படுகின்றன.
இந்நிலையில் கடந்த ஒரு மாதமாக, வேளாண்மை விரிவாக்க விற்பனை நிலையம் மூடப்பட்டுள்ளதால், விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.ஒருவர் மட்டுமே இதுகுறித்து பள்ளிப்பட்டு வேளாண்மை விரிவாக்க அலுவலர் பிரதாப் ராவ் கூறும் போது, ""சின்ன நாகபூடி வேளாண்மை விரிவாக்க அலுவலகத்தில் டெப்போ மேனேஜர் பணியிடம் இதுநாள் வரை நிரப்பப்படவில்லை. உதவி வேளாண்மை அலுவலர் ஒருவர் மட்டும் நியமிக்கப்பட்டு, தினமும் அலுவலகத்தை திறந்து, விவசாயிகளுக்கு தேவையான விதைகளை கொடுத்து வருகிறார்.
**இன்று முடிகிறது**அவரும், உழவர் பெருவிழாவில் கலந்து கொள்ள சென்று விடுவதால், அலுவலகத்தை திறக்க முடியவில்லை. வரும் திங்கட்கிழமை(இன்று) உழவர் பெருவிழா முடிகிறது. அதன்பின், வழக்கம் போல் அலுவலகத்தை திறந்து விவசாயிகளுக்கு விதைகள் வழங்கப்படும்," என்றார்.

## எள் சாகுபடியில் விவசாயிகள் ஆர்வம் :கூடுதல் மகசூல் வாய்ப்பு

பதிவு செய்த நாள் : மே 14,2012,03:25 IST

கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரி மாவட்டத்தில், தற்போது கோடை மழை பெய்துள்ளதால், மானாவாரியில் விவசாயிகள் எள் சாகுபடியில் பணியில் ஈடுபட்டுள்ளனர்.
கிருஷ்ணகிரி மாவட்டத்தில், நெல் மற்றும் தோட்டக்கலை பயிருக்கு அடுத்தப்படியாக சிறுதானிய பயிர்களும், எண்ணெய் வித்து பயிர் அதிக பரப்பில் சாகுபடி செசய்யப்படுகிறது. மத்தூர், போச்சசம்பள்ளி, வேப்பனப்பள்ளி, பர்கூர், ஊத்தங்கரை ஆகிய சுற்றுவட்டார பகுதியில் மானாவாரியாக எள் சாகுபடி செய்யப்படுகிறது. எண்ணை வித்து உற்பத்தி திட்டத்தின் கீழ் நிலக்கடலை, எள், ஆமணக்கு, சூரிய காந்தி சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு மானிய விலையில் விதை விநியோகம் செய்து உற்பத்தி மானியமும் வழங்குகிறது. இதனால், விவசாயிகள் எள் பயிரிடுவதில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.
கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கடந்த சில வாரமாக பரவலாக கோடை மழை பெய்து வருகிறது. இந்த மழையை பயன்படுத்தி மானாவரி எள் சசாகுபடிக்காக விவசாயிகள் நிலத்தை சீர் செய்து எள் விதைப்பை தொடங்கியுள்ளனர்.
இதுகுறித்து வேளாண் துறையினர் கூறியது:
எள் சாகுபடியில் விவசாயிகள் விஞ்ஞான தொழில் நுட்பங்களை முழுமையாக கடைப்பிடித்தால் அதிக மகசூல் பெறலாம். தற்போது எள்ளில் ஏக்கருக்கு, 125 லிருந்து, 140 கிலோ மகசூல் தான்

பெறப்படுகிறது. வேளாண் துறை பரிந்துரைக்கப்படும் முக்கிய தொழில் நுட்பங்களை விவசாயிகள் பின்பற்றினால் ஏக்கருக்கு, 225 கிலோவில் இருந்து, 250 கிலோ வரை மகசூல் எளிதாக பெறலாம். ஒரு கிலோ எள், 40 ரூபாய் என்று கணக்கில் கொண்டால் கூட ஏக்கருக்கு 9 ஆயிரம் ரூபாய் முதல், 10 ஆயிரம் ரூபாய் வரை மூன்று மாதங்களில் பெறலாம்.
ஏக்கருக்கு இரண்டு கிலோ வீதம் டி.எம்.வி-3, வி.ஆர்.ஐ-1, மற்றும் கோ-1 ஆகிய ரகங்களில் ஏதேனும் ஒன்றை தேர்வு செய்து தேவையான மணலுடன் கலந்து சீராக விதைக்க வேண்டும். விதை மூலம் பரவும் நோயினை தடுக்க ஒரு கிலோ விதையுடன் 2 கிராம் கார்பென்டசிம் அல்லது 4 கிராம் டிரைக்கோடெர்மாவிரிடி என்ற அளவில் கலந்து விதைக்க வேண்டும். விதைப்பதற்கு 24 மணி நேரத்துக்கு முன், விதை நேர்த்தி செய்ய வேண்டும். பயிர்களுக்கு இயற்கையாகவே தழைச்சத்து கிடைக்க ஒரு ஏக்கருக்கு தேவையான விதையுடன் ஒரு பொட்டலம் அசோஸ்பைரில்லம் மற்றும் ஒரு பொட்டலம் பாஸ்போ பாக்டீரியா ஆகியவற்றை ஆறிய அரிசி கஞ்சியுடன் கலந்து நிழலில் உலர வைத்து பின் விதைக்க வேண்டும்.
ஏக்கருக்கு அடியுரமாக 5 டன் தொழு உரம் இட்டு அதனுடன் தழை, மணி சசாம்பல் சத்து தரவல்ல 20 கிலோ யூரியா, 31 கிலோ சூப்பர் பாஸ்பேட் மற்றும் 9 கிலோ மூரியேட்ஆப் பொட்டாஸ் உரத்தினை அடியுரமாக இடவேண்டும். விதைத்த 15வது நாள் செடிக்கு செடி 15 செமீ இடைவெளி இருக்கும்படியும் 30வது நாளில் செடிக்கு செடி 30 செமீ இடைவெளி உள்ளவாறு வைத்து மற்ற செடிகளை அகற்றி விட வேண்டும். இவ்வாறு செய்தால் கூடுதல் மகசூல் கிடைக்கும்.இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

## விளைச்சல் குறைவால் பீன்ஸ் விலை உயர்வு

பதிவு செய்த நாள் : மே 14,2012,03:24 IST

ஓசூர்: தேன்கனிக்கோட்டை தாலுகாவில் கோடை வெயிலை தொடர்ந்து பீன்ஸ் விளைச்சல் குறைந்துள்ளது.
தேன்கனிக்கோட்டை தாலுகாவில் அதிகளவு காய்கறிகள் உற்பத்தியாகிறது. தக்காளி, பீன்ஸ், முட்டைகோஸ், கத்திரிக்காய் உள்ளிட்ட காய்றிகளை விவசாயிகள் ஆண்டு முழுவதும் சாகுபடி செய்து வருகின்றனர். இங்கு உற்பத்தியாகும் காய்றிகள், ஓசூர், பெங்களூரு காய்கறி சந்தைகளுக்கு விற்பனைக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. குறிப்பாக தேன்கனிக்கோட்டை தாலுகாவில் தற்போது 1,50 ஹெக்டேரில் பீன்ஸ் சாகுபடி செய்துள்ளனர்.
கடந்த ஒரு மாதமாக கோடை வெயில் வாட்டி வதைத்ததால் பீன்ஸ் பயிர்கள் வாடி மகசூல் வீழ்ச்சியடைந்துள்ளது. இதனால், உள்ளூர், வெளியூர் சந்தைகளில் பீன்ஸ் விலை "கிடுகிடு'வென உயர்ந்துள்ளது. தேன்கனிக்கோட்டை உழவர்சந்தையில் ஒரு கிலோ பீன்ஸ் 55 ரூபாய்க்கும்,

வெளிமார்க்கெட்டுகளில் 65 ரூபாய் வரையும் விற்பனையாகிறது.
இதுகுறித்து வேளாண் அதிகாரி ஒருவர் கூறுகையில், ""பொதுவாக கடந்த சில மாதமாக கோடை வறட்சியால் காய்கறிகள் உற்பத்தி குறைந்தது. உற்பத்தி குறைவால் தற்போது பீன்ஸ் விலையும் அதிகரித்துள்ளது. வரும் ஜூன் மாதம் பருவமழை தொடர்ச்சியாக பெய்தால், பீன்ஸ் விளைச்சல் அதிகரிக்க வாய்ப்புள்ளது. அதுவரை இந்த விலை உயர்வு நீடிக்கும், " என்றார்.

## தமிழகத்தை விட, வட மாநிலங்களில் மஞ்சள் குவிண்டாலுக்கு ரூ.100 சரிவு

பதிவு செய்த நாள் : மே 14,2012,05:29 IST

ஈரோடு: தமிழக மஞ்சள் விலையை விட, மகாராஷ்டிரா, ஆந்திர மாநிலங்களில் மஞ்சள் குவிண்டாலுக்கு 100 ரூபாய் குறைந்த விலை போகிறது என அனைத்து தொழில் வணிக சங்கங்களின் கூட்டமைப்பு பொதுச் செயலாளர் ராஜமாணிக்கம் தெரிவித்தார்.அவர் கூறியதாவது:கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன் ஏற்பட்ட மஞ்சள் தட்டுப்பாட்டால், விலையும் கிடுகிடுவென உயர்ந்தது. நாளடைவில் மஞ்சள் சாகுபடி பரப்பளவு அதிகரித்ததோடு, மஞ்சள் மண்டிகளில் புதிய மஞ்சள் வரத்து நிரம்பி வழிகிறது.இதுவரை இல்லாத அளவில் மஞ்சள் உற்பத்தி இரட்டிப்பால், உச்சத்தில் இருந்த மஞ்சள் விலையும் படிபடியாக குறைந்தது.

தற்போது, ஈரோடு மாவட்டத்தில் மினி சேலம் ரகம் மஞ்சள் குவிண்டால் 4,500 ரூபாய்க்கும், சேலம் ரகம் 3,800 முதல் 4,300 ரூபாய் வரையும், ஈரோடு ரகம் 3,800 ரூபாய்க்கும், எட்டாம் நம்பர் 2,800 முதல் 3,300 ரூபாய் வரையும் விலை போகிறது.அதேபோல், மகாராஷ்டிரா மற்றும் ஆந்திரா மஞ்சள் மண்டிகளில், தமிழக மஞ்சள் விலையை விட குவிண்டாலுக்கு 100 ரூபாய் குறைவாக தான் விலை போகிறது. இந்நிலையில், ஈரோடு வேளாண் அதிகாரிகள், ஆந்திரா, மகாராஷ்டிரா மாநிலங்களில் ஒரு குவிண்டால் 8 ஆயிரம் முதல் பத்தாயிரம் ரூபாய் வரை விலை போகிறது என தவறாக தெரிவிக்கின்றனர்.இவ்வாறு அவர் கூறினார்.

---

## ஜனவரி–மார்ச் மாத காலத்தில் தேயிலை உற்பத்தி 13% சரிவு

*நடப்பு ஆண்டு ஜனவரி – மார்ச் மாத காலத்தில் தேயிலை உற்பத்தி 13 சதவீதம் சரிவடைந்து 8.23 கோடி கிலோவாக குறைந்தது. இது, 2011–ஆம் ஆண்டின் இதே காலத்தில் 9.44 கோடி கிலோவாக இருந்தது. வட மற்றும் தென் மாநிலங்களில் தேயிலை அதிகம் பயிராகும் இடங்களில் உற்பத்தி குறைந்ததே இதற்கு காரணமாகும்.*

*ஜனவரி மாதத்தில்...*

*2012–ஆம் ஆண்டு தொடக்கத்திலிருந்தே தேயிலை உற்பத்தி சரிவடைந்து வருவதாக தெரிகிறது. ஜனவரி மாதத்தில் உற்பத்தி 11 சதவீதம் சரிவடைந்து 1.87 கோடி கிலோவாக இருந்தது. இது பிப்ரவரி மாதத்தில் 4 சதவீதம் குறைந்து 1.60 கோடி கிலோவாக சரிந்தது. மார்ச் மாதத்தில் மட்டும் தேயிலை உற்பத்தி 16 சதவீதம் குறைந்து 4.76 கோடி கிலோவாக குறைந்தது. இது, 2011 மார்ச் மாதத்தில் 5.67 கோடி கிலோவாக இருந்தது.*

*ஜனவரி – மார்ச் மாத காலத்தில் வட இந்தியாவில் தேயிலை உற்பத்தி 3.75 கோடி கிலோவாக இருந்தது. இது, 2011–ஆம் ஆண்டின் இதே காலத்தில் 4.55 கோடி கிலோவை தாண்டியிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.*

*தென் மாநிலங்கள்*

*தென் மாநிலங்களில், முதல் மூன்று மாதங்களில் 4.48 கோடி கிலோ தேயிலை உற்பத்தி ஆனது. இது, சென்ற ஆண்டின் இதே காலத்தில் 4.88 கோடி கிலோவாக இருந்தது.*

# கொலக்கம்பை விவசாயிகளுக்கு லாபம் தரும் பீன்ஸ்

கொலக்கம்பை, மே.14-

கொலக்கம்பை பகுதியில் விளையும் பீன்ஸ் பயிர்களுக்கு நல்ல விலை கிடைப்பதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்து உள்ளனர்.

## காலநிலை

கொலக்கம்பை அருகே தூதூர்மட்டம், டெராமியா, கரும்பாலம், சட்டன், கிளிஞ்சடா உள்ளிட்ட பகுதிகளில் சுமார் ஆயிரம் ஹெக்டேர் பரப்பளவில் மலை தோட்ட காய்கறி விவசாய நிலங்கள் உள்ளன. இதில் தற்போது நிலவும் தட்பவெப்ப நிலைக்கு நல்ல மகசூல் தரும் பயிரான பீன்ஸ் வகைகளை இந்த பகுதி விவசாயிகள் தங்கள் நிலங்களில் பயிர் செய்துள்ளனர். இதில் புஷ், வாட்டக்ஸ், பாம்பே உள்ளிட்ட வகை பீன்ஸ்களை விவசாயிகள் பயிர் செய்து உள்ளனர்.

## வியாபாரிகள்

தற்பொழுது இந்த பகுதிகளில் விவசாயம் செய்யப்பட்டு உள்ள பெரும்பாலான நிலங்களில் உள்ள பீன்ஸ்கள் அறுவடைக்கு தயார் நிலையில் உள்ளது. இதனை விவசாயிகள் அறுவடை செய்தும் வருகின்றனர். இங்கு அறுவடை செய்யப்படும் பீன்ஸ்களை மேட்டுப்பாளையம் மொத்த காய்கறி மண்டிகளுக்கு எடுத்து சென்று விவசாயிகள் விற்பனை செய்து வருகின் றனர்.

இந்த பீன்ஸ்களை கேரளா, கர்நாடகா மற்றும் தமிழ் நாட்டின் பல பகுதிகளில் இருந்து பெரும்பாலான வியாபாரிகள் மொத்தமாக வாங்கி சென்று வருகின்றனர். தற்பொழுது மேட்டுப்பாளையம் காய்கறி மண்டியில் பீன்ஸ் கிலோ ஒன்றுரு.25 முதல் ரூ. 38 வரை விற்பனை ஆகி வருகிறது. இந்த பகுதியில் தற்போது பெய்து வரும் மழையினால் பெரும்பாலான விவசாய நிலங்களில் பயிர் செய்யப் பட்டிருந்த பீன்ஸ்கள் பாதிப்புக்குள்ளாகி வருகிறது. இதனால் விவசாயிகளுக்கு பெருத்த நஷ்டமும் ஏற்பட்டு உள்ளது. பீன்கக்கு போதுமான விலை கிடைத்து வந்தாலும் இது போன்ற இயற்கை சீற்றங்களால் பல்வேறு பாதிப்புகளும் ஏற்பட்டு வருவதாக இந்தபகுதி விவசாயிகள் கவலை தெரிவித்து உள்ளனர்.



கொலக்கம்பை பகுதியில் உள்ள ஒரு தோட்டத்தில் பயிரிடப்பட்டு உள்ள பீன்ஸ் பயிர்.